In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi
S.C.No.8/2020
Deposition of P.W.7

| | |
|---|---|
| Name | **திரு.சுடலைமணி** |
| Father's Name/Husband's Name | **திரு.** |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 16th day of October 2025.

**(எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மில்லர்புரம் ஹவுசிங்போர்டில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எழுதாத காகிதத்தில் அந்த கையொப்பத்தை மில்லர்புரம் ஹவுசிங்போர்டில் வைத்து போட்டு கொடுத்தேன். எதற்காக என்று எனக்கு தெரியாது. கையொப்பம் **அ.சா.ஆ.5.** ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்கும் விதமாக சாட்சியம் அளிக்க முன் வராத காரணத்தால் அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞரால் பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அதன் பேரில் சாட்சி அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் மில்லர்புரம் ஹவுசிங்போர்டு பகுதியில் மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். 1, 2 எதிரிகள் எனது கடைக்கு அருகில் குடியிருந்து வந்தனர் என்று சொன்னால் சரிதான். இந்நிலையில் 1வது எதிரி, 2வது எதிரியுடன் உல்லாசமாக இருப்பதற்கு குழந்தை இடைஞ்சலாக இருப்பதாக 1வது எதிரி குழந்தையை தலையை பிடித்து சுவற்றில் அடித்து கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. பின்னர் 31.07.2016ம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் சிப்காட் காவல் நிலைய ஆய்வாளர் மேற்படி 1, 2 எதிரிகள் தங்கியிருந்த வீட்டை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் விசாரித்தபோது உண்மை விவரங்களை வாக்குமூலமாக அளித்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றவேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> : இல்லை.

<u>**மறுவிசாரணை :**</u>இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/–எம்.பி.முருகன்,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி.